[21st October 1964

(உ) ஆம். எஸ். எஸ். எல். ஸி. அரசாங்கத் தேர்விற்கு தனிப்பட்ட முறையில் எழுத விரும்பும் ஆசிரியர்களும், ஆசிரியைகளும் நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளையுடையவர்களாயிருந்தால் அவர்கள் எல்லோரும் தனிப்பட்ட முறையில் எஸ்.எஸ்.எல்.ஸி., தேர்வு எழுத அனுமதிக்கப்படுகிறார்கள்.

மேலே சொன்ன (2) இனம் சம்பந்தமாக, குறிப்பிட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்கிற பெண்கள் மட்டுமே அனுமதிக்கப் படுகிறார்கள்.

சதாசார சமதி, சென்னை.

* 42. கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னையிலுள்ள சதாசார சமதி மூலமாக இதுவரை லஞ்ச ஊழல் சம்மந்தமான புகார்கள் எவ்வளவு வந்திருக்கின்றன?

(இ) அவைகள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

பதில்.—(அ) ஒன்றுமில்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

மகளிர்க்கான கடிகாரம் இணைப்புத் தொழிற்சாலை.

* 43. கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதில் அளிப்பாரா—

மகளிர்க்கான பல தொழில் கல்லூரிகளில் கடிகாரம் இணைக்கும் தொழில் கல்வியும் ஒரு பாடமாக அமைதல் வேண்டும் என்று மதிப்பீட்டுக்குழு செய்த பரிந்துரைமீது அரசு எடுத்திருக்கும் முடிவு யாது?

பதில்.—இந்திய அரசாங்கத் திட்டத்தில் இத்தகைய பாடமுறை எதுவும் சேர்க்கப்படவில்லை. இப் பாடமுறையை ஆரம்பிக்க முடியுமா என்பது தக்க சமயத்தில் பரிசீலிக்கப்படும்.

பொறியியல் துறையில் பகுதிநேரப் பட்டப்படிப்பு

* 44. கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் :
திரு. மு. கருணாநிதி : } கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா?

தொழில் துறையில் பணிபுரிபவர் வேலையில் இருந்து கொண்டே மேலும் உயர்ந்த பட்டங்களைப் பெறுவதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் வகுப்புக்களைத் துவக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா? ஆமெனில், எந்த ஆண்டு முதல்?

பதில்.—என்ஜினியரிங் டிப்ளமோ தேர்ச்சி பெற்றவர்களுக்காக பகுதிநேரப் பட்டப்படிப்பு வகுப்புகளைத் தொடங்குவதற்கான விரிவான திட்டத்தையும் பாடத்திட்டங்களையும் தயாரிக்க